# இயக்கம்

ரயில் மற்றும் பேருந்து
கார் அல்லது மோட்டார் ஓட்டுதல்
சைக்கிள் சவாரி/ நடைபயணம்/ குதிரை சவாரி
ஓட்டுநர் உரிமம்

# ரயில் மற்றும் பேருந்து

சுவிட்சர்லாந்தில், பொது போக்குவரத்து மிகவும் சிறப்பாக வளர்ச்சி அடைந்துள்ளது. பொது போக்குவரத்து மூலம் நீங்கள் கிட்டத்தட்ட எந்த இடத்தையும் அடையலாம். ரயில்கள் மற்றும் பேருந்துகள் அடிக்கடி இயக்கப்படுகின்றன. மேலும் அவை சரியான நேரத்தில் வருகின்றன.

## பொது போக்குவரத்து

சுவிட்சர்லாந்தில், பொது போக்குவரத்து மிகவும் முக்கியமானது. பலர் ரயில் அல்லது பேருந்தில் பயணம் செய்கிறார்கள். நாம் கிட்டத்தட்ட எந்த இடத்தையும் ஒரு மணி நேரத்தில் பல முறை அடையலாம். டிக்கெட்டுகள் ஓரளவுக்கு விலை உயர்ந்தவை. ஆனால் பணத்தை மிச்சப்படுத்த தள்ளுபடி டிக்கெட் அல்லது சீசன் டிக்கெட் போன்ற பல வழிகள் உள்ளன.
CFF ன் (சுவிஸ் ரயில்வேஸ்) ½ கட்டண சீசன் டிக்கெட் மூலம், சுவிட்சர்லாந்து முழுவதும் பாதி விலையில் பயணம் செய்யலாம்.

## டிக்கெட்டுகள் மற்றும் சீசன் டிக்கெட்டுகள்

ரயிலில் பயணிக்க, புறப்படுவதற்கு முன் டிக்கெட் வாங்க வேண்டும். ரயில்களில் டிக்கெட் வாங்க முடியாது.
பேருந்துகளுக்கு, டிக்கெட்டை பேருந்துகளிலேயே வாங்கலாம்.
அனைத்து ரயில் நிலையங்களிலும் டிக்கெட் இயந்திரங்கள் இருக்கின்றன. பெரிய ரயில் நிலையங்களில், டிக்கெட் கவுண்டர்களும் உள்ளன. டிக்கெட்டுகளை CFF வலைத்தளத்திலோ அல்லது மொபைல் போன் மூலமாகவோ ஆன்லைனில் ஆர்டர் செய்யலாம்.
(Mobile CFF, FAIRTIQ போன்ற) பல செயலிகளின் மூலம், டிக்கெட்டை எளிதாக நம் மொபைல் போனில் வாங்கலாம்.
**[illegible]**
பல்வேறு வகையான சீசன் டிக்கெட்டுகள் உள்ளன:

- ஒரு குறிப்பிட்ட பாதைக்கான சீசன் டிக்கெட் (எ.கா., வீடு - பணியிடம்)
- ஒரு குறிப்பிட்ட மண்டலத்திற்கான சீசன் டிக்கெட் (எ.கா., ஜூராவில் உள்ள Vagabond (ஊர்சுற்றி) பாதை வலையமைப்பு)
- சுவிட்சர்லாந்து முழுவதற்குமான சீசன் டிக்கெட் (அனைத்து CFF சீசன் டிக்கெட்)

சீசன் டிக்கெட்டுகளை வேறொரு நபருக்கு மாற்ற முடியாது.
(டிக்கெட் பரிசோதகரால் கோரப்பட்டால் தன் அடையாள அட்டையை காட்டுதல் மூலம்) சீசன் டிக்கெட் வைத்திருப்பவர் தன் அடையாளத்தை நிரூபிக்க முடிய வேண்டும்.
**[illegible]**
6 வயது வரையிலான குழந்தைகளுக்கு பயணம் இலவசம்.
16 வயது வரை, குழந்தைகள் குறைந்த கட்டணத்தில் பயணிக்கலாம்.
உதாரணமாக, பெற்றோருடன் இருந்தால் "ஜூனியர்" அட்டையுடன் அல்லது மற்றொரு பெரியவர் உடன் இருந்தால் "துணையுடன் குழந்தை" அட்டையுடன்.
டிக்கெட்டுகள் மற்றும் சீசன் டிக்கெட்டுகள் பற்றிய கூடுதல் தகவல்களை Chemins de fer fédéraux (CFF) (ஒன்றிய இருப்புப் பாதை), Chemins de fer du Jura (CJ)( ஜூரா இருப்புப் பாதை) அல்லது பேருந்து நிறுவனத்தின் (Mobiju) வலைத்தளங்களில் அல்லது நேரடியாக ஒரு நிலையத்தில் உள்ள டிக்கெட் அலுவலகத்தில் காணலாம்.

## ஜூரா காந்தோனில் : Réseau Vagabond (ஊர்சுற்றி பாதை வலையமைப்பு)

நாம் ஜூரா காந்தோனிற்குள் சுதந்திரமாக பயணிக்க ஒரு பாஸ் வாங்கலாம். இது ஊர்சுற்றி பாஸ் என்று அழைக்கப்படுகிறது.
நம் தேவைகளைப் பொறுத்து ஒன்று அல்லது பல மண்டலங்களுக்கு பாஸ் வாங்கலாம்.
நாம் அதை ஒரு மாதத்திற்கோ அல்லது வருட முழுவதிற்குமோ வாங்கலாம்.
நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட மண்டலங்களுக்கு வெளியே பயணம் செய்தால், மற்றொரு டிக்கெட் வாங்க வேண்டும்.

## கொம்யூன்களின் நாளாந்திர பாஸ்கள்

சுவிட்சர்லாந்து முழுவதும் ஒரு நாள் சுதந்திரமாகப் பயணிக்க, **carte journalière dégriffée (?????????? ?????????? ????)** வாங்கலாம். இவை பல கொம்யூன்களில் குறைந்த விலையில் கிடைக்கின்றன. மேலும் தகவலுக்கு, உங்கள் கொம்யூனைத் தொடர்பு கொள்ளவும்.
அவற்றுக்கு அதிக தேவை இருப்பதால், முன்கூட்டியே முன்பதிவு செய்வது நல்லது.
CFF வலைத்தளத்திலும் மலிவுவிலை பாஸ்களைப் பெறலாம்.
இந்த வலைத்தளத்தில், அவற்றை எவ்வளவு சீக்கிரமாக வாங்குகிறீர்களோ, அவ்வளவு விலை குறைவாக இருக்கும்.

## Noctambus (இரவு பேருந்து)

ஜூரா காந்தோனில், வார இறுதி நாட்களில் சில பேருந்துகளும் ரயில்களும் இரவு வெகுநேரம் வரை ஓடுகின்றன. இவை இரவு பேருந்துகள்.
வழக்கமான டிக்கெட், ½ கட்டண டிக்கெட், பொது சீசன் டிக்கெட் (AG), இரவு சீசன் டிக்கெட் அல்லது வாகாபாண்ட் டிக்கெட் ஆகியவை இரவு பேருந்துகளில் செல்லுபடியாகும்.
கூடுதல் கட்டணம் தேவையில்லை.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/mobilite/en-train-et-en-bus

# கார் அல்லது மோட்டார் ஓட்டுதல்

சுவிட்சர்லாந்தில் சாலைகள் நன்கு போடப் பட்டவை. போக்குவரத்து விதிகள் மிகவும் முக்கியம். அவை பின்பற்றப் படாவிட்டால், அபராதங்கள் அதிகம்.

## போக்குவரத்து விதிகள்

சுவிட்சர்லாந்தில், போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுவது மிகவும் முக்கியம்.
விதிகள் பின்பற்றப் படாவிட்டால், அபராதங்கள் மிக அதிகம், மேலும் உரிமம் ரத்து செய்யப் படலாம். சில முக்கியமான விதிகள்:

- காரில் பயணிக்கும் அனைத்து பயணிகளும் சீட் பெல்ட் அணிய வேண்டும்.
- 12 வயதுக்குட் பட்ட குழந்தைகள் அல்லது 150 செ.மீ.க்குக் குறைவான குழந்தைகள் அவர்களுக்கு பொருத்தமாக மாறிக் கொள்ளும் இருக்கையில் இருக்க வேண்டும். அது கட்டாயமாகும்.
- மது (சட்ட வரம்பு 0.5‰) அல்லது போதைப்பொருள் அருந்தி விட்டு வாகனம் ஓட்டுவது சட்டப்படி தண்டனைக்குரியது.
- வாகனம் ஓட்டும்போது கையில் தொலைபேசியை வைத்திருப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

கையால் பிடிக்காத சாதனம் கொண்ட தொலைபேசியை மட்டுமே நீங்கள் பயன்படுத்த முடியும்.

- பகலில் கூட ஹெட்லைட் (தாழ் ஒளிர்வில்) எரிய வேண்டும்.
- அதிக போக்குவரத்து உள்ள பகுதிகளில், வேக வரம்பு பொதுவாக 50 கிமீ/மணி.

இருப்பினும், சில தெருக்களில் வேக வரம்பு 30 அல்லது 20 கிமீ/மணி யாக இருக்கலாம்.
சாலை அறிவிப்பு பதாகைகளை கவனித்து அதன்படி நடப்பது அவசியம்.

- அதிக போக்குவரத்து உள்ள பகுதிகளுக்கு வெளியே, வேக வரம்பு 80 கிமீ/மணி.
- நெடுஞ்சாலைகளில், வேக வரம்பு 120 கிமீ/மணி. சில நேரங்களில் நீங்கள் 100 கிமீ/மணி அல்லது அதற்கும் குறைவாக வேகத்தைக் குறைக்க வேண்டும்.

சாலை அறிவிப்பு பதாகைகளை கவனித்து அதன்படி நடப்பது அவசியம்.

- இடதுபுறத்தில் முந்திச் செல்ல வேண்டும். இருப்பினும், வெள்ளைக் கோடு தொடர்ச்சியாக இருக்கும் போது முந்திச் செல்வது தடை செய்யப் பட்டுள்ளது.
- சாலையைக் கடக்க (மஞ்சள் கோடுகளால் குறிக்கப் பட்ட) பாதசாரிகள் கடக்கும் இடத்தை பயன் படுத்தும் போது பாதசாரிகளுக்கு எப்போதும் முன்னுரிமை உண்டு.
- விபத்து ஏற்பட்டு, யாருக்கும் அடிபட்டிருந்தால் அல்லது வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டால், காவல்துறையை அழைக்க வேண்டும்.

## நெடுஞ்சாலை சுங்க வரிகள்

சுவிட்சர்லாந்தில், அரசு சாலைகளுக்கு நிதியளிக்கிறது. நெடுஞ்சாலைகளைத் தவிர, சாலைகளில் நீங்கள் இலவசமாக வாகனம் ஓட்டலாம்.
நெடுஞ்சாலைகளில் வாகனம் ஓட்ட, நீங்கள் ஒரு பட்டையை வாங்க வேண்டும். இது ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும்.
சுங்கச் சாவடிகள், பெட்ரோல் நிலையங்கள், தபால் நிலையங்கள், சில கடைகள் அல்லது காந்தோனிய சாலை போக்குவரத்து அலுவலகங்களில் நீங்கள் அதை ஸ்டிக்கராக (பட்டை) வாங்கலாம். இது வாகனத்தின் முன் கண்ணாடியில் ஒட்டப் பட வேண்டும்.
அதை மின்னணு வடிவில் ஆன்லைனிலும் வாங்கலாம்.

## காப்பீடு

சுவிட்சர்லாந்தில், (கார், மோட்டார் சைக்கிள் போன்ற) மோட்டார் வாகனங்களுக்கு மோட்டார் வாகனங்களுக்கான மூன்றாம் தரப்பு பொறுப்பு காப்பீடு இருக்க வேண்டும். அது கட்டாயமாகும்.
மற்றவர்களின் உயிர் அல்லது உடல் சேதம், வாகனங்களுக்கு சேதம் ஏற்பட்டால் இந்த காப்பீடு இழப்பீடு வழங்கும்.
மோட்டார் வாகனங்களுக்கான மூன்றாம் தரப்பு பொறுப்பு காப்பீடு தனிநபர் மூன்றாம் தரப்பு பொறுப்பு காப்பீட்டில் சேர்க்கப் படவில்லை. இது ஒரு தனி காப்பீட்டுக் கொள்கையாகும்.
தங்கள் சொந்த வாகனத்திற்கு ஏற்படும் சேதத்திற்கு, (பகுதி அல்லது முழு) Casco காப்பீட்டை வாங்கலாம். இந்த காப்பீடு கட்டாயமில்லை.
ஆனால் எச்சரிக்கை: நீங்கள் தவறு செய்திருந்தால், அல்லது நீங்கள் மது அல்லது போதைப்பொருள் உட்கொண்டிருந்தால், காப்பீட்டு நிறுவனம் பணம் செலுத்த மறுக்கலாம்.
பல தனியார் காப்பீட்டாளர்கள் இந்த வகையான காப்பீட்டை வழங்குகிறார்கள்.

## வெளிநாட்டிலிருந்து மோட்டார் வாகனத்தை இறக்குமதி செய்தல்

நீங்கள் சுவிட்சர்லாந்தில் வசிக்க விரும்பினால், வேறொரு நாட்டிலிருந்து உங்கள் காரைக் கொண்டு வர விரும்பினால், நீங்கள் சுங்கத் துறைக்குத் அறிவிக்க வேண்டும். உங்கள் வாகனத்தை சுங்கத் துறையிலிருந்து வெளியெடுக்க வேண்டும். இதன் பொருள் வாகனத்தின் ஆவணங்களை சமர்ப்பித்து வரி செலுத்த வேண்டும்.
வாகனம் தொழில்நுட்ப பரிசோதனையிலும் தேர்ச்சி பெற வேண்டும்.
பின்வருபவை உங்களிடம் இருப்பது கட்டாயம்:

- மோட்டார் வாகனங்களுக்கான மூன்றாம் தரப்பு பொறுப்பு காப்பீடு,
- சுவிஸ் வாகனப் பதிவுச் சான்றிதழ்,
- மற்றும் சுவிஸ் பதிவு எண் (உரிமத் தகடு).

Office cantonal des véhicules (OVJ) (காந்தோனிய வாகன அலுவலகம்) உங்களுக்கு இந்த விஷயத்தில் தேவையான அனைத்து தகவல்களையும் வழங்குகிறது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/mobilite/circuler-en-voiture-ou-a-moto

# சைக்கிள் சவாரி/ நடைபயணம்/ குதிரை சவாரி

ஜூராவில், சைக்கிள் பாதை வலையமைப்பு மிகவும் சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளது. சைக்கிளில் பயணிப்பது மிகவும் இனிமையானது. கால்நடையாக ஆராய பல நடைபயணப் பாதைகள் உள்ளன. மேலும் ஜூரா தன் எண்ணற்ற குதிரை சவாரி பாதைகளுக்கும் பெயர் பெற்றது.

## கால்நடையாக, சைக்கிளில் அல்லது குதிரையில் பயணித்தல்

பொதுவாக, ஜூராவின் நகரங்கள் மற்றும் கிராமங்களில் கால்நடையாகவோ அல்லது சைக்கிளிலோ சுற்றி வருவது இனிமையானது மற்றும் பாதுகாப்பானது. பல இடங்களில், பாதசாரிகளுக்கான நடைபாதைகள், கார் இல்லாத தெருக்கள் மற்றும் சைக்கிள் பாதைகள் உள்ளன.
இந்த காரணத்திற்காக, பலர் சைக்கிள் அல்லது கால்நடையாக குறுகிய தூர பயணங்களை மேற்கொள்கிறார்கள்.
பாதசாரி பாதைகளில், மற்ற வாகனங்களை விட பாதசாரிகளுக்கு எப்போதும் முன்னுரிமை உண்டு. ஆனால் அவர்கள் எப்போதும் எதிரே வரும் வாகனங்களை கவனமாக கவனிக்க வேண்டும்.
ஜூரா காந்தோனில், நாம் அழகான மலையேற்றப் பாதைகளை அனுபவிக்க முடியும். இந்தப் பாதைகள் மஞ்சள் பலகைகளால் குறிக்கப் பட்டுள்ளன.
குதிரை சவாரிக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப் பட்ட பாதைகளும் உள்ளன.
Saignelégier, St-Ursanne, Porrentruy மற்றும் Delémont த்தில் உள்ள சுற்றுலா அலுவலகங்களில் கூடுதல் தகவல்களை பெறலாம். அல்லது Jura Tourisme (ஜூரா சுற்றுலா)வலைத்தளத்தில் பெறலாம்.

## சைக்கிள் ஓட்டுவது எப்படி: சாலை விதிகள்

சுவிட்சர்லாந்தில், மின்சாரம் இல்லாத சைக்கிளை ஓட்ட உரிமம் அல்லது தேர்வில் தேர்ச்சி பெற வேண்டிய அவசியமில்லை.
பொதுவாக, சைக்கிள் ஓட்டுபவர்கள் வாகன ஓட்டிகளைப் போலவே சாலை விதிகளையும் பின்பற்ற வேண்டும். சைக்கிள் பாதைகள் இருக்கும் இடங்களில், சைக்கிள் ஓட்டுபவர்கள் அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.
சைக்கிள் நல்ல செயல்பாட்டு நிலையில் இருக்க வேண்டும்: அதில் இரண்டு செயல்படும் பிரேக்குகள், ஒரு மணி, பிரதிபலிப்பு கூறுகள் (முன் மற்றும் பின்புற விளக்குகள் மற்றும் பெடல்கள்) மற்றும் ஒரு முன் மற்றும் பின்புற விளக்கு இருக்க வேண்டும்.
ஹெல்மெட் அணிவது கட்டாயமில்லை, ஆனால் மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது.
Pro Vélo Jura (ஜூரா சைக்கிள் நிபுணன்) சைக்கிள் ஓட்ட கற்றுக் கொள்வதற்கான படிப்புகளை வழங்குகிறது.
நீங்கள் உங்கள் சைக்கிளால் விபத்து ஏற்படுத்தினால், நபர்களுக்கும் சொத்துக்களுக்கும் ஏற்படும் சேதத்தை தனிநபர் மூன்றாம் தரப்பு பொறுப்பு காப்பீடு இழப்பீடு வழங்கும்.

## மெதுவான, வேகமான மற்றும் கனரக மின்சார சைக்கிள்கள்

மெதுவான மின்சார சைக்கிளை ஓட்ட (மணிக்கு 25 கிமீ வேகம் வரை, பதிவுஎண் இல்லாமல்), உங்களுக்கு குறைந்தபட்சம் 14 வயது இருக்க வேண்டும். 16 வயது வரை, உங்களுக்கு M வகை ஓட்டுநர் உரிமம் தேவை. அதன் பிறகு, அது கட்டாயமில்லை.
ஹெல்மெட் அணிவது பரிந்துரைக்கப் படுகிறது, ஆனால் கட்டாயமில்லை.
?????? ??????? ???????? (மஞ்சள் பதிவுஎண் தகடுடன், மணிக்கு 45 கிமீ வரை) அல்லது ???? ??????? ???????? (450 கிலோ வரை சரக்கு மற்றும் மஞ்சள் பதிவுஎண் தகடுடன் மணிக்கு 25 கிமீ வரை) ஓட்ட, உங்களுக்கு M உரிமமும் (அல்லது உயர் வகை உரிமம்) தேவை. இது 14 வயதிலிருந்தே அனுமதிக்கப்படுகிறது.
சைக்கிளில் வேகமானி பொருத்தப்பட வேண்டும். மேலும் ஹெல்மெட் அணிவது கட்டாயமாகும்.
அனைத்து வகையான மின்சார பைக்குகளுக்கும், பகலில் கூட, விளக்குகள் எப்போதும் எரிய வேண்டும்.

## மின்சார ஸ்கூட்டர்கள்

மின்சார ஸ்கூட்டர் ஓட்டுபவர்கள் சைக்கிள் ஓட்டுபவர்களைப் போலவே அதே விதிகளைப் பின்பற்ற வேண்டும். நடைபாதைகளில் ஓட்டுவது தடைசெய்யப் பட்டுள்ளது.
ஹெல்மெட் அணிவது பரிந்துரைக்கப் படுகிறது, ஆனால் கட்டாயமில்லை.
பயணிகளை ஏற்றிச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
எச்சரிக்கை: விற்கப்படும் பல ஸ்கூட்டர்கள் சுவிஸ் தரநிலைகளுக்கு இணங்கவில்லை. பொது சாலைகளில் அவற்றைப் பயன்படுத்த முடியாது. உங்கள் ஸ்கூட்டரை Office cantonal des véhicules (OVJ)(காந்தோனிய வாகன அலுவலகத்தில்) சரிபார்த்துக் கொள்ளலாம்.

## குறைந்த விலையில் சைக்கிள் வாங்குதல்

பயன்படுத்திய சைக்கிள்களையும், மலிவான சைக்கிள்களையும் சைக்கிள் கண்காட்சிகளில் (வருடத்திற்கு 1 முதல் 2 முறை) அல்லது தொண்டு நிறுவன கடைகளில் காணலாம்.

## தன் சைக்கிளை எடுத்துச் செல்தல்

ரயில் அல்லது பேருந்தில் சைக்கிளை எடுத்துச் செல்ல, ஒரு சிறப்பு டிக்கெட்டை வாங்க வேண்டும்.
உங்களுடன் சைக்கிளை எடுத்துச் செல்வது எல்லா இடங்களிலும் சாத்தியமில்லை. நீங்கள் முன்கூட்டியே சரிபார்க்க வேண்டும். சில ரயில்களில், சைக்கிளுக்கு இடத்தை முன்பதிவு செய்ய வேண்டும்.
https://www.sbb.ch/fr/informations-voyages/besoins-individuels/voyager-avec-velo/transport-velo-train.html
சைக்கிளை ரயிலில் எடுத்துச் செல்தல் (FR)

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/mobilite/a-velo-a-pied-a-cheval-2

# ஓட்டுநர் உரிமம்

சுவிட்சர்லாந்தில் கார் அல்லது மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கு, ஓட்டுநர் உரிமம் கட்டாயமாகும். சுவிட்சர்லாந்திற்கு குடிபெயரும்போது, உங்கள் வெளிநாட்டு ஓட்டுநர் உரிமத்தை சுவிஸ் உரிமமாக மாற்ற வேண்டும்.

## வெளிநாட்டு ஓட்டுநர் உரிமம்

சுவிட்சர்லாந்திற்கு குடிபெயரும்போது, உங்களிடம் ஏற்கனவே ஓட்டுநர் உரிமம் இருந்தால், அதை சுவிஸ் உரிமத்திற்கு பரிமாற்றிக் கொள்ள வேண்டும். உங்களுக்கு இதை செய்ய 12 மாதங்கள் உள்ளன. உங்கள் கோரிக்கையை Office cantonal des véhicules (OVJ) (காந்தோனிய வாகன அலுவலத்தில்) கூற வேண்டும்.

நீங்கள் வரும் நாட்டைப் பொறுத்து, உங்கள் சுவிஸ் ஓட்டுநர் உரிமத்தைப் பெறுவதற்கு நீங்கள் சில தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கலாம். நீங்கள் கோட்பாடு மற்றும்/அல்லது செயல்முறை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டியிருக்கலாம். Office cantonal des véhicules (OVJ) (காந்தோனிய வாகன அலுவலகம்) உங்களுக்கு இந்த விஷயத்தில் தேவையான அனைத்து தகவல்களையும் வழங்குகிறது.

## ஓட்டுநர் கோட்பாட்டுத் தேர்வு

ஓட்டுநர் உரிமத்தைப் பெற விரும்பினால், முதலில் நீங்கள் ஒரு கோட்பாட்டுத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்.

ஜூரா காந்தோனில், கோட்பாட்டுத் தேர்வை பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலியன் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுதலாம். Office cantonal des véhicules (OVJ) (காந்தோனிய வாகன அலுவலகம்) உங்களுக்கு தேவையான அனைத்து தகவல்களையும் வழங்குகிறது.

## செயல்முறை ஓட்டுநர் தேர்வு

கோட்பாட்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவுடன், உங்களுக்கு பயிற்சி ஓட்டுநர் அனுமதிச் சீட்டு கிடைக்கும். ஒரு தொழில்முறை பயிற்றுவிப்பாளரிடம் ஓட்டுநர் பயிற்சியை பெறுவது நல்லது. செயல்முறை ஓட்டுநர் தேர்வை எதிர் கொள்ள நீங்கள் தயாராகும் போது பயிற்றுவிப்பாளர் உங்களுக்குச் சொல்வார்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/mobilite/le-permis-de-conduire